அவர்கள் சொன்னதுமாதிரி முறைப்படி எழுதிக்கொடுத்து கேட்டால் தான் முழு விவரத்தோடு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கமுடியும். அமைச்சர் அவர்கள் எந்தத் தேதி என்று குறிப்பிட்டார்கள். அதைக்கூட கூறியிருக்க வேண்டியது அவசியம் இல்லை. இருந்தாலும் அவர்கள் பெருந்தன்மையின் அடிப்படையில் இந்த அவையின் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அதை அளித்திருக்கிறார்கள். இந்த விவாதத்திலே கலந்து கொள்கிறபோது பிரச்சனைகளை எழுப்பலாம். தனியாகக் கேட்கவேண்டும் என்றால் சட்டப் பேரவையின் விதிமுறைகளின்படிதான் கேட்கவேண்டும். ஒரு அடிப்படையும் இல்லாமல் திடீர் என்று எழுந்து கேட்பது என்பது சரிப்பட்டு வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சுருக்கமாகச் சொன்னது உங்களுக்கு விளங்கவில்லை. அதையே நாவலர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: ஜீரோ அவர் என்பது நாவலர் அவர் களுக்கு புதுமையானது அல்ல.

5. தகவல் கோரல்

(அ) பேருந்து விபத்து

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலிருந்து சிலோனுக்கு 36 பேர்கள் சுற்றுலா சென்று இருக்கிறார்கள். அவர்கள் பேருந்து மூலம் செல்கிற நேரத்தில் 16 பேருக்கு விபத்து ஏற்பட்டு அதில் 3 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவை எல்லாம் எழுத்து மூலமாக கொடுத்து விளக்கங்களை கேட்டால் விளக்கம் தர முடியும். ஒவ்வொரு ஊரிலிருந்தும் சுற்றுலா போகிறார்கள். ஆங்காங்கே விபத்துகள் தினசரி நடந்துகொண்டிருக்கின்றன. உங்கள் தொகுதியிலிருந்து போனவர்களாக இருந்தால் அதற்காக தனி முக்கியத்துவம் அளிக்கமுடியாது. எழுத்து மூலம் கொடுங்கள்.

(ஆ) ஆந்திராவிலிருந்து அரிசி கொண்டு வருதல்.

திரு. ந. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடக்கும்போது நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆந்திராவிலிருந்து 40 லட்சம் டன் அரிசி கொண்டு வருவது பற்றி வெளியில் பேசியிருக்கிறார்கள்...